மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

12.08.2022 வெள்ளிக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# கட்டணத்தை நாட்டு மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

அசாதாரண மின் கட்டண உயர்வால், ஒட்டுமொத்த மக்களும் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளதாகவும், இதனை நாட்டு மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று (12) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சாதாரண மக்கள் முதல் தொழில்முனைவோர் வரை இந்நிலை கடுமையாக பாதிப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், தற்போது அசாதாரண அழுத்தத்தின் மத்தியிலுள்ள மக்களுக்கு இது மற்றொரு சுமையாகும் எனவும் தெரிவித்தார்.



மட்டக்களப்பு தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய தீர்த்தோற்சவம் இன்று(12) நடைபெற்ற போது...

# பொதுமக்களின் உதவியை நாடும் இலங்கை பொலிஸார்

நாட்டில் கடந்த ஜ¤லை 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கு பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர். ஜனாதிபதி மாளிகைக்குள் கடந்த ஜ¤லை 9 ஆம் திகதி புகுந்து, அங்கிருந்த உடைமைகளுக்கு சேதம் விளைவித்தமை உள்ளிட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்யவே இவ்வாறு பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர். இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என, சமூகவலைத்தளங்கள் மற்றும் சி.சி.ரி.வி காட்சிகள் மூலம் அடையாளம் காணப்பட்ட நபர்களின் புகைப்படங்களை பொலிஸார் வெளியிட்டுள்ளனர். இந்நிலையில் குறித்த நபர்கள் தொடர்பான தகவல்களை அறிந்தவர்கள், 071-8591559, 071-8085585, 011-2391358 அல்லது 1997 ஆகிய எண்களுடன் தொடர்புகொள்ளுமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

# 2000 நாட்கள் பூர்த்தி காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள்



வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் போராட்டம் மேற்கொண்டு வரும் நிலையில் இன்றுடன்(வெள்ளிக்கிழமை) யுடன் 2000 நாட்களை கடந்துள்ளது. இதேவேளை உறவுகளை தேடியலைந்து 121 உறவுகள் நோயினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். இதில் வவுனியா மாவட்டத்தில் 16 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக உறவுகள் தெரிவித்துள்ளனர். மேலும் சர்வதேசத்தின் தலையீடுகளை கோரியும் , ஐக்கிய நாடுகள் தலையீடு செலுத்தி தீர்வுகளை பெற்றுத்தருமாறு கோரியும் உறவுகள் தமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிட்டதக்கது.

# முச்சக்கரவண்டிகளுக்கு எரிபொருள் கோட்டாவை அதிகரிக்க நடவடிக்கை

கட்டணம் அறவிட்டு, பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகள் தொடர்பான அறிக்கையொன்றை வழங்குமாறு எரிசக்தி அமைச்சு, போக்குவரத்து அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த அறிக்கை கிடைத்ததன் பின்னர் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்காக வழங்கப்படும் எரிபொருள் கோட்டாவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு அறிவித்துள்ளது..



# 80% வரவு தேவையில்லை

இவ்வாண்டு டிசம்பர் மாதம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு 80% வரவு கருத்திற்கொள்ளப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சு இதை அறிவித்துள்ளது




# அகற்றப்படும் காலி முகத்திடல் கூடாரங்கள்

காலி முகத்திடல் போராட்டப் பகுதியில் தங்கியிருந்த மக்கள் மற்றும் கூடாரங்களை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் அது தொடர்பான அறிவிப்பு ஒன்றையும் பொலிஸார் அப்பகுதியில் காட்சிப்படுத்தியுள்ளனர்.



# நாடு கடத்துவதற்கு எதிராக நீதிமன்றில் எழுத்தானை மனு

இலங்கையிலிருந்து தன்னை நாடு கடத்தும் நடவடிக்கைக்கு எதிராக ஸ்கொட்லாந்தின் சுற்றுலாப்பயணியான கேய்லெய் பிரேசர் எழுத்தானை மனுவை தாக்கல் செய்துள்ளார். காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் தான் கலந்துகொண்டதாகவும்,அதன் பின்னர் தனது விசாவை இரத்துச்செய்வதற்கான தன்னிச்சையான முடிவை குடிவரவுகுடியகல்வு திணைக்களம் எடுத்துள்ளதாகவும் அவர் தனது மனுவில் தெரிவித்துள்ளார். சமூக ஊடகங்களில் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டங்கள் குறித்த பதிவுகளை வெளியிட்டமைக்காக ஸ்கொட்லாந்து சுற்றுலாப்பயணியின் விசாவை இரத்துச்செய்துள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. அவர் 15ம் திகதிக்கு முன்னர் நாட்டிலிருந்து வெளியேறவேண்டும் என குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.



# கோட்டா இலங்கையில் சுதந்திரமாக வாழ சந்தர்ப்பம் வேண்டும்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அடிப்படை உரிமையான இலங்கைக்கு வருவதை உறுதிப்படுத்துமாறு கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இன்று (12) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிவில் மற்றும் சமூக ஊடக ஆர்வலரான ஓஷல ஹேரத்தினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி இலங்கையின் பிரஜை எனவும் அவர் முன்னாள் முதல் குடிமகன் எனவும் அவர் இலங்கையில் சுதந்திரமாக வாழ சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கோழி மற்றும் முட்டை விலைகள் அதிகரிக்கூடும்


கோழி இறைச்சி மற்றும் முட்டை விலை மேலும் அதிகரிக்கலாம் என அகில இலங்கை கோழி இறைச்சி விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அதன் தலைவர் அஜித் குணசேகர இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 1,400 ரூபா வரையில் அதிகரிக்கலாம் எனவும், முட்டையொன்றின் விலையானது 70 ரூபா வரையில் உயருமெனவும் குறிப்பிட்டார்.

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் கோழி தீவனம் இறக்குமதிக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையே இதற்கு காரணமெனவும் அவர் சுட்டிக்காட்டினார். இதனால் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி 40 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# 12 மணி நேர மின்வெட்டு ஏற்படலாம்

எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள் நிலக்கரி இருப்புகளை கொண்டு வருவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாவிட்டால் 12 மணி நேரம் மின்வெட்டு ஏற்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக பெய்து வரும் மழை காரணமாக இந்த நாட்களில் மின்சார உற்பத்தி பெரும்பாலும் நீர் மின்சாரம் மற்றும் நிலக்கரி மூலம் மேற்கொள்ளப் படுவதாக அதன் தலைவர் ஜனக ரத்நாயக்க குறிப்பிடுகின்றார். எனினும், இது டிசம்பரில் செய்யப்பட வேண்டும். அக்டோபர் முதல் ஏப்ரல் வரை மட்டுமே நிலக்கரியை இறக்குமதி செய்ய முடியும் என்று அவர் மேலும் கூறினார்.



# மன்னாரில் அதிகரிக்கும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை

## பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. வினோதன்




( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் கடந்த 11 தினங்களாக கொரோனா தொற்று மிகவும் அதிகமாக காணப்படுகிறது. இந்த வருடத்தில் மொத்தமாக 967 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் இந்த வருடத்தில் மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக கொரோனா தொற்றால் 40 பேர் உயிரிழந்திருக்கின்றார்கள் எனவே பொதுமக்கள் இது தொடர்பாக மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தர்மராஜா வினோதன் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தர்மராஜா வினோதன் வெள்ளிக்கிழமை (12.08.2022) தனது அலுவலகத்தில் நடாத்திய ஊடகச் சந்திப்பின்போது மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் கடந்த 11 தினங்களாக கொரோனா தொற்று மிகவும் அதிகமாக காணப்படுகிறது இந்த வருடத்தில் மொத்தமாக 967 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

இந்த மாதத்தில் (ஓகஸ்ட்) முதல் 11 நாட்களிலும் மொத்தமாக 103 பேர் கொரோனா தொற்றினால் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்

இந்த வருடத்தில் மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக கொரோனா தொற்றால் 40 பேர் உயிரிழந்திருக்கின்றார்கள். தற்போது அடையாளம் காணப்பட்டு இருக்கின்ற இந்த கோவிட் தொற்றானது சாதாரண தடிமன் தலை பாரம் சளிஇ காய்ச்சல் போன்ற அறிகுறிகளுடன் காணப்படுகின்றது. இந்த தொற்றினால் அநேகம் பேர் வீட்டில் இருந்தவாறு சுய சிகிச்சை பெற்று வரும் இந்த நேரத்தில் எம்மால் கண்டறியப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையானது உண்மையான எண்ணிக்கையை விட மிகவும் குறைவான எண்ணிக்கையாக காணப்படுகிறது.

அதாவது 103 நோயாளர்கள் எம்மால் அடையாளம் கண்டறியப்பட்டிருந்தால் அதைவிட ஏழு அல்லது எட்டு மடங்கான நோயாளர்கள் சிகிச்சைக்கு வைத்தியசாலைக்கு வராமல் வீடுகளில் சுய சிகிச்சை செய்து கொண்டு வீடுகளில் தங்கி இருக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது

இந்த நோயாளர்கள் சாதாரண நிலைமையில் காணப்பட்டாலும் கூட சமூகத்தில் அதிக அளவு இந்த வைரஸ் குறுகிய காலத்தில் பரவும்போது திரிபடையக் கூடிய சாத்திய கூறு கானப்படுகின்றது. அவ்வாறு வைரஸ் திரிபடைந்தால் வீரியம் கூடிய வைரஸ் ஒன்று இந்த சமூகத்தில் பரவினால் அதனுடைய தாக்கம் மற்றும் அதனால் ஏற்படும் இறப்புக்களும் அதிகமாக இருக்கும். எனவே பொதுமக்கள் இது தொடர்பாக மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் தற்போதைய நாட்டின் சூழ்நிலை காரணமாக பொதுமக்களை பிரயாணங்களை முடக்கவோ முடியாத சூழ்நிலை இருக்கின்றது

எனவே பொதுமக்கள் இவ்வாறான காலங்களில் கட்டாயமாக முக கவசங்களை அணிந்து சமூகத்திலும் போக்குவரத்தை பயன்படுத்தும் போதும் கட்டாயமாக முகக் கவசங்கள் அணிந்திருக்க வேண்டும் அத்தோடு மக்கள் கூட்டம் அதிகமாக உள்ள இடங்களில் தங்கி இருப்பதை தவிர்த்துக் கொண்டு சமூக இடைவெளியை பேணிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

அத்தோடு மன்னார் மாவட்டத்தில் இதுவரையில் 20 வயதுக்கு மேற்பட்ட 64 சதவீதமானவர்கள் முதலாவது மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியை அல்லது மூன்றாவது ஃபைசர் தடுப்பூசியை பெற்றிருக்கின்றார்கள்

இது வட மாகாணத்தில் மிகவும் அதிக அளவில் பெறப்பட்ட தடுப்பூசி ஆகும்

இதில் மூன்றாவது அல்லது மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியினை இதுவரையில் பெற்றுக்கொள்ளாதவர்கள் உடனடியாக உங்கள் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தை அல்லது பொதுச் சுகாதார பரிசோதகர்களை தொடர்பு கொண்டு இந்த தடுப்பூசியை பெற்றுக் கொள்ளலாம்

இதேவேளை அறுபது வயதிற்கு மேற்பட்டவர்கள் நோய்வாய் பட்டவர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட விரும்பியவர்கள் தமது நான்காவது தடுப்பூசி அல்லது இரண்டாவது மேலதிக வலுவூட்டல் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியும். இவர்களும் சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொது சுகாதார பரிசோதகர்களை நாடி தமது தேவைகளை நிறைவு செய்து கொள்ளலாம். இலங்கையிலேயே மிகவும் குறைவான கொரோனா நோயாளர்கள் காணப்பட்டு குறைவான மரணங்கள் பதிவு செய்யப்பட்டு இருப்பது மன்னார் மாவட்டமே

இது உண்மையில் சுகாதாரத் திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்களத்தின் நடவடிக்கைகள் மாத்திரம் இன்றி கடந்த காலங்களில் பொதுமக்கள் வழங்கிய ஒத்துழைப்பினாலயுமே இவை சாத்தியமானது. இதேபோன்ற ஒத்துழைப்பைத்தான் நாங்கள் இந்த கடினமான சந்தர்ப்பத்திலும் மக்களிடம் மீண்டும் கேட்டிருக்கின்றோம். மேலும் அவர் தெரிவிக்கையில் தற்போது மடுமாதா திருத்தலத்தின் உற்சவம் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இவ் திருவிழாவிற்கு அதிகமான பக்தர்கள் மன்னார் மற்றும் வேறு இடங்களில் இருந்தும் வருகை தர உள்ளார்கள்

ஆகவே இந்த திருவிழாவுக்கு வருகை தரும் மக்களும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளையும் சுகாதார வழிமுறைகளையும் கட்டாயமாக கடைபிடிக்க வேண்டிய கட்டாயம் உண்டு

இவ் தொற்று நோய் காரணமாக இவ்வாறான திருவிழாக்களில் கலந்து கொள்ளும் பக்தர்களின் எண்ணிக்கையை வரையறுக்கும் இயலுமை எனக்கு தற்பொழுது இல்லை

ஆகவே கலந்து கொள்ளும் மக்களே தமது பொறுப்புக்களை உணர்ந்து சுகாதார வழிமுறைகளை கடைப்பிடித்து தாமும் தாம் சார்ந்தவர்களும் பாதுகாப்பாக இருப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்

# மட்டக்களப்பு சிறைச்சாலையில் நான்காம் கட்ட பூஸ்டர் தடுப்பூசி



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

நாடளாவிய ரீதியில் மீண்டும் கொரோனா தொற்று பரவிவரும் நிலையில் சுகாதார அமைச்சினால் நாடளாவிய ரீதியில் பல்வேறு கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்குப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிராந்திய சுகாதார பணிமனை ஊடாக பல்வேறு கொரோனா தடுப்பு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதன் முதற்கட்டமாக அரச அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு முதற்கட்டமாக நான்காம் கட்ட பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்நேற்று (11) திகதி முதல் மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதம ஜெயிலர் ஆர்.மோகன்ராஜ் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக, மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடமையாற்றும் 136 சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கும் 555 சிறைக்கைதிகளுக்கும் குறித்த பூஸ்டர் தடுப்பசி ஏற்றும் நடவடிக்கைநேற்று(11) முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறித்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையினை மட்டக்களப்பு மண்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி இளையதம்பி உதயகுமார் தலைமையிலான சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருதில் தொற்றா நோய் தடுப்புக்கான கேந்திர நிலையம்

நூருள் /ஹுதா உமர்

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் இன்று (12) வெள்ளிக்கிழமைகல்முனைசுகாதாரபிராந்தியதொற்றாநோய்த்தடுப்புக்கான கேந்திர நிலையம் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.ஆர்.எம். தௌபீக் மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் ஆகியோர்களின் பங்குபற்றுதலுடன் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ வாஜித் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம். மாஹிர் உள்ளிட்ட பிரிவுத்தலைவர்களும் சுகாதார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலுக்கமைவாக சாய்ந்தமருது பிரதேச வைத்திய அதிகாரி எம்.எச்.கே. சனூஸ் அவர்களினால் இந்நிலையத்தின் பணிகள் கடந்த இரண்டு மாதங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இன்று திறந்து வைக்கப்பட்ட இந்நிலையத்தின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதுடன் இதற்கான விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் நிகழ்வில் கலந்து கொண்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். மேலும் இந்நிகழ்வில் கண் பரிசோதனைக்கான உபகரணங்களும் குளிரூட்டியும் ஒலிக்கருவிகளும் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கிராம உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளை எடுத்துரைத்தார் எதிர்கட்சி தலைவர் சஜித்



நாடளாவிய ரீதியில் பரந்து சேவையாற்றும் கிராம உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து கட்டளை நியதிகள் சட்டம் 27ஃ2 இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று (12) பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

கிராம உத்தியோகத்தர்கள் பொதுமக்களுக்கு மிக நெருக்கமான கிராம மட்டத்திலான அரச உத்தியோகத்தர்களாகும் என்பதோடு,

இக்கிராம உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களது கோரிக்கைகள் தொடர்பில் இரண்டு தடவைகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்தேன். இதன் பிரகாரம், நிலையில் கட்டளை 27(2) இன் கீழ் 23.03.2021 மற்றும் 29.11.2021 ஆகிய தினங்களில் இரண்டு கேள்விகள் இந்த பாராளுமன்றத்தில் என்னால் முன்வைக்கப்பட்டன.அன்று முன்வைக்கப்பட்ட போது அவர்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்று கிராம உத்தியோகத்தர்களுக்காக பிரத்தியேகமான சேவை யாப்பொன்றை உருவாக்க வேண்டும் என்பதாகும். அதற்குப் பதிலளிக்கும் வகையில் அப்போதைய துறை சார் அமைச்சர் இதற்கானஅமைச்சரவைஅங்கீகாரம்வழங்கப்பட்டுள்ளதாகவும், அந்த சேவை யாப்பு வரைவு செய்யப்பட்டு, வரைச்சட்டம் மேலதிக பணிகளுக்காக சம்பள ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

எனினும், இந்த கோரிக்கை இன்று வரை நிறைவேற்றப்படவில்லை என அகில இலங்கை சுதந்திர கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் மற்றும் இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் என்பன இணைந்து சுட்டிக்காட்டியுள்ளன.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

இந்த விடயத்தில் அரசாங்கத்தின் விசேட கவனத்தை மீளக் குவிக்கும் நோக்கில் பின்வரும் கேள்விகளை நான் சமர்ப்பிக்கின்றேன். இதன் பிரகாரம்,இந்தக் கேள்விகளுக்கான குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்களையும் அரசிடம் இருந்து எதிர்பார்க்கிறேன்.

01. கிராம உத்தியோகத்தர் பதவிக்கான புதிய பிரத்தியேகமான சேவை யாப்பை உருவாக்கும் விடயத்தின் தற்போதைய முன்னேற்றம் என்ன? இதற்காக இவ்வளவு காலம் செல்வதற்கு ஏதுவான காரணங்கள் என்ன? இது தொடர்பாக இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும்?

02. 06ஃ2006 சம்பள திருத்தத்தின்படி நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்தை நிறுவியதில் அலுவலகம் மற்றும் தர அடிப்படையில் பணிபுரியும் கிராம உத்தியோகத்தர்கள் பொருந்தாத சம்பள பிரிவில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதை அரசு ஏற்றுக்கொள்கிறதா? எனவே, எதிர்காலத்தில் சரியான சம்பளப் பிரிவை நிறுவுவது தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

03. தற்போது வேகமாக அதிகரித்து வரும் எரிபொருள் விலையினால் கிராம உத்தியோகத்தர்கள் தமது பிரிவுகளில் களப்பணிகளில் ஈடுபடும் போது வழங்கப்படும் பயணக் கொடுப்பனவு எவ்வகையிலும் போதுமானதாக இல்லை என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். தற்போதைய சூழ்நிலையில் உதவித்தொகை போதாது என்பதை அரசு ஏற்றுக்கொள்கிறதா? அப்படியானால்,எதிர்காலத்தில் இதற்கான போதிய கொடுப்பனவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

# மரம் நடும் நிகழ்வு



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

ஓட்டமாவடி கோட்டக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அறபா நகர் முஹைதீன் அப்துல் காதர் வித்தியாலயத்தில் மரம் நடும் நிகழ்வு அதிபர் ஏ.யூ.எம்.நளீம் (ஸலாமி) தலைமையில் 10.08.2022ம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது. பாடசாலையின் வளாகத்தை அழகுபடுத்தும் நோக்கிலும் மாணவர்களிடையே மரநடுகையை ஊக்குவித்தல், இயற்கை சமநிலையைப் பேணும் நோக்கிலும் குறித்த மரநடுகைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த மரநடும் நிகழ்வில், பிரதேச கிராம சேவை உத்தியோகத்தர் எம்.எம்.சாதாத், ஓய்வுபெற்ற அதிபர்களான ஏ.எல்.நெய்னா முகம்மது, எம்.எம்.பிர்தௌஸ், பள்ளிவாயல் தலைவர் அப்துல் ஹமீட், பொருளாளர் செய்யது அஹமட், பாடசாலை அமுலாக்க குழுத்தலைவர் அல்ஹாஜ் காதர், கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் காதர், ஹப்பி எய்ட் நிறுவனத்தின் முக்கியஸ்தர்களான முஹம்மது ஹஸ்மீர், முஹம்மது ஹாரிஸ், ஆசிரியர் எம்.ஐ.முஹாஜிரீன், பள்ளிவாயல் நிருவாக உறுப்பினர் ஹனீபா, பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் எம்.அஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டு மரங்களை நாட்டி வைத்தனர்.

குறித்த மரக்கன்றுகளை **Eiliyah's Garden and Nursery** நிறுவனத்தினர் ஹப்பி எய்ட் நிறுவனத்தினரூடாக அன்பளிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கோலாகலமாக நடைபெற்ற உகந்தை மலை முருகன் ஆலய தீர்த்தோற்சவம்!










வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம் நேற்று (11 )வியாழக்கிழமை மதியம் 11.30 மணியளவில் ஆலயத்திற்கு முன்னால் உள்ள சமுத்திரத்தில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

ஆலய பிரதம சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்களின் தலைமையில், ஆலயத்தில் சுன்னம் இடித்து, கிரியைகள், அபிசேகம் பூஜைகளுடன் ,வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான் ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்டு தீர்த்தோற்சவம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது..

மூன்று வருட இறுக்கமான சூழ்நிலைக்கு பின்னர் நடைபெற்ற தீர்த்தோற்சவம் என்பதால், வரலாறு காணாத வகையில் மூவினங்களையும் சேர்ந்த சுமார் ஒரு லட்சம் அடியார்கள் கலந்து கொண்டனர்.

காடு கடல் மலை எல்லாம் அடியார்கள் மிகவும் நெருக்கமாக நின்றார்கள். அலைகடலில் அலைமோதி லட்சம் அடியார்கள் தீர்த்தமாடினர்.

கடந்த யூலை மாதம் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 நாட்கள் திருவிழாக்கள் இடம்பெற்று வந்தன. எம்பெருமான் ஊர்வலம் தேவார பாராயணங்கள் பாடி, மங்கல வாத்தியங்கள் முழங்க ஆயிரக்கணக்கான அடியார்கள் சகிதம் ஆலய வலம் வந்து சமுத்திரத்தை அடைந்தார்.

அங்கு விசேடமாக அமைக்கப்பட்ட வேப்பிலை பந்தலில் முருகப் பெருமானுக்கும் ,வேலுக்கும் விசேட பூஜை வழிபாடுகள், அபிசேகம் நடைபெற்றன. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சீதாராம் குருக்கள் ,உதவிக்குரு சிவசிறி கோபிநாத சர்மா உள்ளிட்ட சிவாச்சாரியார்கள் கிரியைகளை சிறப்பாக நடாத்தினார்கள்.

ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க சங்கல்பத்தில் இருந்தார். தொடர்ந்து அடியார்கள் புடை சூழ வேத,நாத, மேளங்களுடன் அடியார்களின் அரோகரா கோசங்களுடன் கோலாகலமாக சமுத்திரத்தில் தீர்த்தோற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

பொலிசார் சிறப்பாக தமது பாதுகாப்பு முறைமைகளை மேற்கொண்டார்கள்.

உகந்தையிலிருந்து
காரைதீவு நிருபர் சகா

# மாணவ தலைவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி பாசறை





**நூருல் /ஹுதா உமர்**

கல்முனை கல்வி வலய கமு/கமு/ உவெஸ்லி உயர்தரபாடசாலையின்மாணவத்தலைவர்களுக்கான ஒரு நாள் தலைமைத்துவ பயிற்சி பாசறை நேற்று (11.08.2022) பாடசாலையில் நடைபெற்றது. பாடசாலையின் அதிபர் .எஸ். கலையரசன் அவர்களின் தலைமையில் பாடசாலையின் உப அதிபரும், ஒழுக்காற்றுக் குழுவின் செயலாளருமான ஜீ. அல்பரட் கரன் ஆசிரியரின் நெறிப்படுத்தலின் கீழ் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

# நுவரெலியாவில் இரத்ததான முகாம்



**தலவாக்கலை பி.கேதீஸ்**

இலங்கை வங்கி தனது 83 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு நுவரெலியா கிளையின் முகாமையாளர் எம்.ராமனின் ஏற்பாட்டில் இரத்தான முகாமொன்று இடம்பெற்றது. 100 ற்கு அதிகமானோர் இரத்தான முகாமில் கலந்துக்கொண்டு இரத்தம் வழங்கினர். இந்நிகழ்வில் நுவரெலியா இலங்கை வங்கி கிளையின் முகாமையாளர் எம்.ராமன், அதன் பிரதேச முகாமையாளர் பி.விஸ்வநாதன், நுவரெலியா பொது வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் நுவரெலியா இலங்கை வங்கி கிளையின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

# திருகோணமலையில் வீடு திறந்து வைப்பு





**(அ . அச்சுதன்)**

சுவிட்சர்லந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தினால் திருகோணமலையில் நிர்மாணிக்கப்பட்ட நான்காவது வீடு திருகோணமலை உதயபுரி பிரதேசத்தில் இன்று காலை (12.08.2022) திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வு அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சரவணபவானந்தம் திருச்செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தின் நிர்வாக கிராம உத்தியோகத்தர் நாகலிங்கம் ஜெயகாந்தன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு வீட்டினை திறந்து வைத்தார்.

இவ்வீடு அறப்பணி மையத்தின் நிறுவுனர் சக்தி சுவிஸ் சுரேஷ் சகோதரரின் நேரடி கண்காணிப்பில், சுவிட்சர்லாந்து பேர்ன் மாவட்டத்தில் வசிக்கும் சுவிஸ் மன்ற சக்திகளான திரு.திருமதி ஸ்ரீதரன் சுயமதி குடும்பத்தினர் மற்றும் அவர்களது பிள்ளைகளின் நிதியனுசரணையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வறிய குடும்பத்திற்காக நிர்மாணிக்கப்படவுள்ள இவ்வீடானது ஆதிபராசக்தி அறப்பணி மையத்தினால் திருகோணமலை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட நான்காவது வீடு என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசியல் மறுசீரமைப்பானது முழுமையாக தமிழ் மக்களை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் [ஜனா]

அரசியல் மறுசீரமைப்பானது முழுமையாக தமிழ் மக்களை இலக்காகக் கொண்டிருக்கவேண்டும். ஜனாதிபதி ஆட்சிமுறை மாற்றம், பாராளுமன்ற ஆட்சிமுறை குறித்ததாக இருந்தாலும் தமிழர்களுடைய பிரச்சினைக்கான தீர்வை நோக்கியதாக அரசியல் மறுசீரமைப்பானது அமையவேண்டும் என்று குறிப்பிட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம் (ஜனா) மாறாக பெரும்பான்மை சமூகத்தையும், பௌத்த தேசியவாதத்தையும், மேலாண்மையையும் இலக்காகக் கொண்டதாக இருக்குமானால் நீங்கள் எதிர்பார்க்கின்ற தேசிய இணக்கப்பாடு சாத்தியமற்றதாகவே இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

9வது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை வைபவரீதியாக ஜனாதிபதி ஆரம்பித்து வைத்து ஆற்றிய உரைமீதான ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ.கருணாகரம் (ஜனா) இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் (ஜனா),

ஜனாதிபதியினுடைய கொள்கைப் பிரகடன உரையில், வடக்கு கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவேன் என்று ஒற்றை வார்த்தையில் முடித்துக் கொண்டது போன்றே தோன்றுகிறது. நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி உருவாவதற்கு முக்கிய காரணமாக இருக்கின்ற இலங்கையின் புரையோடிப்போன வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை சிங்களத் தலைவர்கள் பார்க்கின்ற பார்வை விநோதமானதே.

இப்போது சர்வ கட்சி அரசாங்கத்திடம் தமிழர்களின் கோரிக்கைகளில் முக்கியமானதாக இருப்பது நில அதிகரிப்பை நிறுத்த வேண்டும், அபகரித்த நிலத்தை உடனடியாக விடுவிக்க வேண்டும். வடக்கு கிழக்கில் பௌத்த விகாரைகள் அமைப்பதை நிறுத்த வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும். தமிழரின் பாரம்பரிய தாயகப் பிரதேசமான வடக்கு கிழக்கில் உள்ள இராணுவம் குறைக்கப்பட வேண்டும் என்பவைகளாகவே இருக்கின்றன. அவற்றினை விடவும் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் சரியான விசாரணை நடத்தப்பட்டு உண்மை கண்டறியப்படுதல் வேண்டும் போன்றவைகளே.

இந்த நாட்டுக்கு சர்வகட்சி ஆட்சியே தேவை. இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டே நடந்து கொண்டிருக்கின்ற தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்துக்கு இதுவரை தீர்வில்லை. கடந்த கால வரலாறுகளை நாங்கள் திரும்பிப்பார்ப்போமானால், இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டே தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக பார்க்கப்பட்டார்கள். அவர்களுக்கான அநீதியும் நடைபெற்றுக் கொண்டு வந்தது. சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே 49இல் டி.எஸ்.சேனாநாயக்கா அவர்கள் கிழக்கு மாகாணத்தில் குடியேற்றத்தை கல்லோயாத் திட்டத்தின் ஊடாக முயற்சித்திருந்தார். நடைமுறைப்படுத்தினார். 1921ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் இருந்த சிங்கள மக்களின் சனத்தொகை 0.5வீதம் ஆனால் இன்று 24 வீதமாக உயர்ந்ததற்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக இருந்தது மட்டுமல்ல 1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. அன்றிலிருந்து அகிம்சை ரீதியாகவும், ஆயத ரீதியாகவும் போராடி இன்று ஒரு ஜனநாயகப் போராட்டத்தில் இருக்கின்றார்கள். ஆனால், பண்டா– செல்வா ஒப்பந்தம் நடைபெறும் போது ஜே.ஆர். ஜெயவர்த்தனா கண்டி யாத்திரை புத்த பிக்குகளுடன் சென்றிருந்தார். , டட்லி – செல்வா ஒப்பந்தம் நடைபெறும் போது சிறிமாவோ பண்டாரநாயக்கா எதிர்த்திருந்தார். 2000ஆம் ஆண்டுகளில் சந்திரிகா அம்மையாரின் ஆட்சியில் நீலன் திருச்செல்வம், ஜீ.எல். பீரிஸ் போன்றவர்களின் முயற்சியில் ஒரு தீர்வுப் பொதி உருவாக்கப்பட்டது. அந்தத் தீர்வுப் பொதி இன்றுவரை நல்ல தீர்வுத்திட்டமாகப் இருந்தது என்று கூறிக் கொண்டிருந்தார்கள். அன்றைய அந்தத் தீர்வுப் பொதியை இன்றைய ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்தில் எரித்திரிருந்தார். நாங்கள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தினைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டம் நடத்திய தமிழ் போராட்ட இயக்கங்களில் கூடுதலானவை அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டோம் 89இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பங்குபற்றியிருந்தோம். அன்றைய காலத்தில் எம்.ஈ.பி. யை பிரதிநிதித்துவப்படுத்தி கௌரவ பிரதமர் அவர்கள் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களை இங்கு வைத்திருந்தார். நாங்கள் தமிழ் ஈழ விடுதலை இயக்கமாக அவருடைய வீட்டுக்குச் சென்று அரசியல் தீர்வுத் திட்டம் சம்பந்தமாக நீண்ட பேச்சுக்களை நடத்தியிருந்தோம்.



நல்லாட்சி அரசாங்க காலத்தில் நீங்கள் பிரதமராக இருந்து தொடங்கிவைத்த முயற்சி பயனற்றுப் போனது. உங்களுடைய ஜனாதிபதி பதவிக்காலத்தில் இப்போது நீங்கள் கூறியிருக்கின்ற புதிய அரசியலமைப்பு மாற்றம், தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் என்பது வெறுமனே பொருளாதாரம் சார்ந்ததல்ல என்பதனைப் புரிந்து கொள்ளவேண்டும். புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்வதென்பது தமிழர்களின் பிரச்சினைக்குரிய நியாயமான தீர்வு முன்வைக்கப்பட்டபின்னரே சாத்தியமாகும் என்பது சிங்களத் தலைவர்கள் அனைவருக்கும் புரியவேண்டும். இல்லாது போனால் உங்களுடைய புலம்பெயர் தமிழர்களை உதவிக்களைக்கும் முயற்சி பயனற்றதாகவே ஆகும்.

நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடியைச் சீர்செய்வதற்கான பல்வேறு வழிகளை ஜனாதிபதியவர்கள் அவருடைய உரையில் முன்வைத்திருக்கிறார். அவை அனைத்துமே நடைமுறைக்கு வருமானால் பாராட்டப்படத்தக்கதாக இருக்கும். திட்டங்கள் அனைத்து நடைமுறைப்படுத்தப்படும் போது மக்கள் நிம்மதியடையவேண்டும். மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படவேண்டும் என்பதே எம்முடைய எதிர்பார்ப்பாகும். போராட்டக்காரர்களால் உருவாகியிருக்கின்ற இந்த மாற்றத்தை பாராட்டாமலிருக்க முடியவில்லை. ஆனால் போராட்டக்காரர்களைக் கைது செய்வதும் தடுத்து வைப்பதும், கடத்துவதும் கண்டனத்துக்குரியதாகும். இந்தக் கைதுகள் நெருக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும். போராட்டங்கள் நடத்துவது ஜனநாயக உரிமை எனக் கூறிக்கொண்டு அடக்குமுறையை மேற்கொள்வது கண்டனத்துக்குரியதாகும்.

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் விவசாயம், மீன்பிடி, கால்நடைவளர்ப்பு என உற்பத்தித் துறைகள் காணப்படுகின்றன. வடக்கைப் பொறுத்தவரையில் கிழங்கு உற்பத்தி, வெங்காய உற்பத்தி சிறப்பாக நடைபெறுகிறது. அங்கு அறுவடை நடைபெறுகின்றவேளை வெளிநாடுகளிலிருந்து அதே உற்பத்திகளை இறக்குமதி செய்வதும், எமது விவசாயிகளுக்கான உரம் வழங்கல் பொலநறுவை, அனுராதபுர பிரதேசங்களின் நேர அட்டவணைக்கு ஏற்ப நடைபெறுவதும், அவர்களுடைய அறுவடைக் காலத்துக்கு ஏற்ப நெல் சந்தைப்படுத்தல் சபை நெல்லைக் கொள்வனவு செய்தலும் விலை நிர்ணயம் நடைபெறுவதும் பாரபட்சமான விடயமாகும். இதில் மாற்றம் செய்யப்பட்டாகவேண்டும்.

இன்று யூரியா பசளை 65ஆயிரம் மெற்றிக்தொன் வர இருந்தும் 40ஆயிரம் மெற்றிக்தொன் இலங்கைக்கு வந்திருக்கின்றது. அதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 216 மெற்றிக் தொன் மாத்திரமே கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கான காரணம் கூறப்படுவது, மட்டக்களப்பு அம்பாரையில் அறுவடை முடிந்துவிட்டமு. அனுராதபுரம், பொலநறுவையில் விதைப்பு நடைபெறுவதாக கூறப்படுகிறது. ஆனால் அடுத்த 25 மெற்றிக்தொன் வரும் போதும் மட்டக்களப்பில் பெரும்போக விவசாயம் தொடங்கப்பட்டுவிடும். பெரும்போக விவசாயம் செய்வதற்காவது யூரியாவைக் கொடுக்கவேண்டும்.

நீங்கள் குறிப்பிடுகின்ற அரசியல் மறுசீரமைப்பானது முழுமையாக தமிழ் மக்களை இலக்காகக் கொண்டிருக்கவேண்டும். ஜனாதிபதி ஆட்சிமுறை மாற்றம், பாராளுமன்ற ஆட்சிமுறை குறித்ததாக இருந்தாலும் தமிழர்களுடைய பிரச்சினைக்கான தீர்வை நோக்கியதாக அரசியல் மறுசீரமைப்பானது அமையவேண்டும். மாறாக பெரும்பான்மை சமூகத்தையும், பௌத்த தேசியவாதத்தையும், மேலாண்மையையும் இலக்காகக் கொண்டதாக இருக்குமானால் நீங்கள் எதிர்பார்க்கின்ற தேசிய இணக்கப்பாடு சாத்தியமற்றதாகவே இருக்கும்.

இன்று இலங்கையின் நிலையை நாங்கள் கருத்தில் கொள்ளவேண்டும். பெற்றோலுக்கு எரிவாயுவுக்கு மக்கள் வரிசையில் நிற்கின்றார்கள் ஆனால் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புக் கொடுக்கும் நோக்கில் தமிழ் மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையும் நடக்கின்றது. கடந்த 03.08.2022 இரவு 8.40 மணியளவில் கைதடி பலநோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முன்னாள் சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் தனபாலசிங்கம் சுதர்சனது கழுத்தில் கைத்துப்பாக்கியை வைத்து மிரட்டியிருக்கின்றார். இந்த நிலைமை மாறவேண்டும்.

இதற்கும் மேலாக, பொருளாதாரம் அதலபாதாளத்துக்குள் சென்றிருந்தது. முன்னைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்களது மடத்தனமான, மூடத்தனமான நடவடிக்கையின் காரணமாக பொருளாதாரம் அதலபாதாளத்துக்குள் சென்றிருந்தாலும், அவர் நாட்டைவிட்டு சென்றிருந்தாலும் இருப்பதற்கு ஒரு நாடு இல்லாமல் இருக்கின்றார். அந்த வேளையில் இந்தியா தான் பொருளாதார உதவியை வழங்கியிருந்தது. ஏற்கனவே கடன்வசதிகள்கொடுக்கப்பட்டிருந்தாலும்,பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது கிரடிற் லைன் மூலமாக கிட்டத்தட்ட நான்கு மில்லியயனுக்கும் அதிகமான உதவிகளைச் செய்திருந்தார்கள். எரிபொருள் உதவி, உதவி மருந்துப் பொருள்களை வழங்கியிருந்தார்கள். ஆனால் இன்று என்ன நடக்கின்றது. பூகோள அரசியலில் இலங்கைளை பகடைக்காயாக சீனா பயன்படுத்துகின்றது. வர இருக்கும் கப்பல் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது என்று இந்தியா கூறியிருக்கின்றது. அயல் நாடான இந்தியா அனைத்து நேரங்களிலும் எமக்கு ஆதரவாக இருக்கின்ற போது நாங்கள் அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமே தவிர, இந்தியாவை எவ்வேளைகளிலும் பகைத்துக் கொள்ளக்கூடாது.










மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய தீர்த்தோற்சவம் பெரும்திரளான அடியார்கள் பங்கேற்புடன் இன்று(12) வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கடந்த மாதம் 22ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இவ்வருடத்திற்கான உற்சவம் நேற்று(11) வியாழக்கிழமை முனைக்காடு மக்களின் உபயத்துடன் இறுதி திருவிழா இடம்பெற்று, இன்று அதிகாலை விசேட பூசைகளைத் தொடர்ந்து புண்ணிய தீர்த்தோற்சவம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மாயையை ஏற்படுத்த சர்வகட்சி அரசாங்கம்

## - நாடாளுமன்றில் இம்ரான் மகரூப் எம். பி தெரிவிப்பு -



ஹஸ்பர்

இன்று இந்த அரசாங்கம் 134 உறுப்பினர்களை வைத்துக்கொண்டு சர்வகட்சி அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு ஏன் முயற்சிக்கின்றார்கள் என்ற சந்தேகம் எழும்புவதாகவும் இதன் பின்னனியில் சர்வதேசத்தை திருப்திப்படுத்தும் மாயை இருப்பதாகவும் புதன்கிழமை (10)நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரித்தார். மேலும் உரையாற்றுகையில், இந்த அரசாங்கத்தின் மீது சர்வதேசம் நம்பிக்கையிழந்து காணப்படுவதால் ஐஆகு, மத்திய கிழக்கு நாடுகள் உதவமுடியாது என்று கூறியிருக்கின்றன. ஏனைய வெளிநாட்டு உதவிகள் தடை செய்யப்பட்டுள்ளன. ஆகையால் சர்வகட்சி அரசாங்கம் என்ற விடயத்தை உருவாக்கி சர்வதேச நாடுகளுக்கு ஒரு மாயையை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக இவ்வாறான பேச்சுக்கள் நடைபெறுகின்றன. இந்த சர்வகட்சி அரசாங்கத்திலே எங்களுடைய எதிர்கட்சியும் தயாராக இருக்கிறது. ஆனால் அமைச்சுப்பதவிகள் பெற்றுக்கொள்ளாமல் பாராளுமன்றத்தில் உதவுகின்ற அதேவேளை நல்ல விடயங்களுக்கு ஆதரவளிப்பதற்கும், இந்த அரசாக்கத்தை வழிநடாத்தி உதவுவதற்கும் எங்களுடைய கட்சியின் தலைவரும் நாங்களும் தயாராக இருப்பதாக தெரிவித்தார். மேலும் அவருடைய உரையில், திருமலை மாவட்டத்தில் வாழ்கின்ற மீனவர்கள் தங்களின் தொழிலை செய்வதற்கு போதியளவு மண்ணெண்னை கிடைக்காமல் அல்லல் படுகின்றனர் என்ற விடயத்தையும் தொடர்புடைய அமைச்சருக்கு தெரியப்படுத்தினார்.

# மடு விழாவுக்கு வாகனங்களில் வருவோர் எரிபொருளை பாதுகாப்பாக வைக்கவும்

## அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல்



(வாஸ் கூஞ்ஞ)

மடு பெருவிழாவுக்கு அதிகமானவர்கள் வருகை தந்து கூடாரங்கள் அமைத்து விறகுகளில் சமைத்து வருவதால் வெளி மாவட்டங்களில் இருந்து வாகனங்களில் வருவோர் தங்களுடன் எரிபொருளையும் கொண்டு வருவதால் தீ பற்றாத நிலையில் எரிபொருளை மிகவும் பாதுப்புடனும் பௌத்திரமாகவும் வைத்திருக்க வேண்டும் என மன்னார் அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் இவ்வாறு தெரிவித்தார். ஆவணி (15.08.2022) மடுத் திருவிழா தொடர்பாக மன்னார் அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் ஊடகங்களுக்கு மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 15 ந் திகதி (15.08.2022) நடைபெற இருக்கும் மடு அன்னையின் திருவிழா தொடர்பான முன்னேற்பாடான மீளாய்வுக் கூட்டம் செவ்வாய் கிழமை (09.08.2022) மடுத்திலத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையுடன் இணைந்து திணைக்களத் தலைவர்கள் அனைத்து பாதுகாப்பு தரப்புடன் இணைந்து கூட்டத்தை நடாத்தி இருந்தோம். இதன் அடிப்படையில் இம்முறை அதிகமான பக்தர்கள் இவ் ஆவணி பெருவிழாவுக்கு வருகை தர இருப்பது எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

தற்பொழுதுள்ள சூழலில் கொவிட் 19 தொற்று நோய் அதிகரித்து வருவது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆகவே இவ் பெருவிழாவுக்கு வருவோர் கட்டாயம் முகக் கவசம் அணிந்து வரப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளையில் எரிபொருள் பிரச்சனையும் காணப்படுகின்றது. பெரும்பாலும் வெளி மாவட்டங்களிலிருந்து இங்கு வருவோர் தங்கள் வாகனங்களில் திரும்பிச் செல்வதற்காக உங்கள் வாகனங்களில் கேன்களில் எரிபொருள் கொண்டு வரும் நிலை ஏற்பட்டால் அவற்றை இங்கு மிகவும் பாதுகாப்பாக பௌத்திரமாக வைத்திருக்க வேண்டிய நிலை இருக்கின்றது.

மக்கள் மடுத் தேவாலய வளாகத்துக்குள் அதிகமான கூடாரங்களை அமைத்திருக்கின்றார்கள். இங்கு அதிகமானவர்கள் விறகுகளின் மூலமே தங்கள் சமையல் செயல்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். ஆகவே தங்களுடன் கொண்டுவரப்படும் எரிபொருளை மக்களுக்கு அருகாமையில் வைத்துக்குத் கொள்வது பாதுகாப்பாக இருக்காது. ஆகவே தங்களுடன் கொண்டு வரப்படும் எரிபொருளை மிகவும் பாதுகாப்புடன் வைத்திருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றோம்.

இவ் விழாவுக்கான சகல ஏற்பாடுகளும் திணைக்களங்களுடன் இணைந்து திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்து நிற்கின்றோம் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் இவ்வாறு தெரிவித்தார்.

# திருநீற்றுக்கேணி முருகன் ஆலயத்தின் தீர்த்தோற்சவம்







ரக்ஸனா)

கிழக்கில் மிகவும் பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு களுதாவளை திருநீற்றுக்கேணி சிவ சக்தி ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வருடாந்த தீர்தோற்சவம் வியாழக்கிழமை(11) காலை ஆலய முற்றலில் அமைந்துள்ள தீர்த்தக்குளத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. கடந்த 2 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய அவ்வாலயத்தின் திருவிழா தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா இடம்பெற்றன. புதன்கிழமை(10) இரவு திருவேட்டைத்திருவிழா இடம்பெற்றத்தைத் தொடர்ந்து வியாழக்கிழமை கலை மூல மூர்த்தியாகிய முருகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராய் மயில் வாகனத்திலும், பிள்ளையார் மூசுக வாகனத்திலும், சிவன் உடன்உறை பார்வதி சமேதராய் இடபவாகனத்திலும், உள்வீதி, வெளி வீதி வலம் வந்து, வியாழக்கிழமை காலையில் சுபமுகுர்த்த வேளையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ தீர்த்தோற்சவம் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து இவ்வருடத்திற்கான திருவிழா இனிதே நிறைவு பெற்றது.

# உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைப்பு





நூருல் /ஹுதா உமர்

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி மற்றும் பெரும் வெள்ளம் காரணமாக அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 320 து ஒல்டன் மற்றும் 320னு ஸ்ரஸ்பி தோட்டக்குடியிருப்பில் வாமும் பெண்கள் தலைமை தாங்கும் வசதி குறைந்த விதவைகள் குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்கள் கிராம சேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி, அம்பகமுவ கந்தவேலாசத சுவாமி ஆலயத்தின் நிர்வாக சபை உறுப்பினர் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர். இந்நிகழ்வு ஒல்டன் கந்தவேலாயுத சுவாமி ஆலயத்தில் நடைபெற்றது.

இதற்கான நிதியுதவியினை லண்டன் எல்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம் மற்றும் நீம் நிறுவனம் வழங்கி வைத்திருந்தனர். இதனை Friendly Ship Foundation மற்றும் நியூ சண் ஸ்டார் இளைஞர் கழகம் என்பன இணைந்து ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# இறைவனை மறந்து வாழ்கின்றோம்

## இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை

(வாஸ் கூஞ்ஞ)

மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் தொழில்கள் மிகவும் பாதிப்பு நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றது. அரசியல் பொருளியலில் பாதிப்பகளுக்கு உள்ளாகியுள்ள நாம் இறைவனை மறந்து வாழ்கின்றோம். களவு கொள்ளை அதிகரிக்கப்பட்டு மக்கள் மத்தியில் அச்ச நிலை காணப்பட்டு வருகின்றது. விலைவாசி அதிகரிப்பானது மக்களுக்கு ஒரு சவாலாக மாறி வருகின்றது. யாவரும் நற்செயல் புரிபவராகவும் உதவி செய்யும் மனப்பாங்குடனும் வாழ நாம் எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும் என மன்னார் ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்டத்தில் தலைமன்னார் பங்கின் பாதுகாவலராம் புனித லோறன்சியார் ஆலய வருடாந்த திருவிழா புதன்கிழமை (10.08.2022) கொண்டாடப்பட்டபோது மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை இவ் விழாவில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்த வேளையில் தனது மறையுரையில் தெரிவித்ததாவது

திருச்சபையின் சொத்துக்களை ஒப்படை என அரசன் கட்டளையிட்டபோது மூன்று தினங்களுக்குப் பின் ஏழை எளியவர்களை காண்பித்து இதுவே திருச்சபையின் சொத்து என காட்டியமையால் புனித லோறன்சியார் இரும்பு கட்டிலில் படுக்க வைத்து அவரை நெருப்பினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த துன்பத்திலும் புனித லோறன்சியார் வேதனையிலும் மகிழ்ச்சியுடன் அவற்றை எதிர் கொண்டார்.

உரோமை நகர் மக்கள் மனம் திரும்பவும் கிறிஸ்துவ விசுவாசம் உலகெங்கும் பரவவும் இவர் தனது உயிரை இவற்றிற்காக துறந்தார். வேதாகமத்தின்படி 'சிறியவற்றில் நம்பிக்கைக்குரியவனாக இருந்தால் பெரியவற்றுக்கு உன்னை அதிகாரியாக்குவேன்' என இயேசு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புனித லோறன்சியாரின் மரணத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டும் துன்ப நிலத்திலிருந்தே அறுவடை செய்யப்படுகின்றது. ஒரு கோதுமை மணி மண்ணலில் விழுந்து மடிந்தால்தான் அது மரமாக முடியும். இவ்வாறான நிலையிலே திருச்சபை வளர்கின்றது. ஆகவே நாம் அன்பிய வாழ்வில் ஒன்றிணைந்து திரு அவையாக வளர்வோம். அன்பியங்கள் எமது ஆசிய நாடுகளில் அதிகமாக இருந்து வருகின்றன. இந்த அன்பியங்கள் ஆரம்பிக்கப்பட்டு இலங்கையில் 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

இந்த அன்பிய வாழ்வாலே ஆசிய நாடுகள் வளர்ந்து வருகின்றது. வாரத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் திருப்பலிக்கு சென்று வந்தால் சரி என்று இருக்காது வாரம் ஒருமுறையாவது எமது வட்டாரங்களில் ஒன்றுகூடி இறை வார்த்தைகளை பகிர்ந்து நாம் இறை சாட்சிகளாக வாழ வேண்டும்.

இன்று அன்பிய வாழ்வு சிறப்பாக நடக்கின்றது என நாம் கூறமுடியாது. ஒரு மந்தைக்கு ஆயன் எவ்வாறு அவசியமோ அவ்வாறே இறைமகன் எமக்கு ஒரு நல்ல ஆயனாக இருந்து செயல்படுகின்றார்.



அவரை நாம் பின்பற்ற வேண்டும்.

இந்த உலகத்தில் நாம் பல சவால்கள் மத்தியில் வாழ்கின்றோம். இன்று இலங்கை நாடு மிகவும் நெருக்கடி நிறைந்த நாடாக காணப்படுகின்றது. மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் தொழில்கள் மிகவும் பாதிப்பு நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றது. அரசியல் பொருளியலில் பாதிப்பகளுக்கு உள்ளாகியுள்ள நாம் இறைவனை மறந்து வாழ்கின்றோம். களவு கொள்ளை அதிகரிக்கப்பட்டு மக்கள் மத்தியில் அச்ச நிலை காணப்பட்டு வருகின்றது. விலைவாசி அதிகரிப்பானது மக்களுக்கு ஒரு சவாலாக மாறி வருகின்றது. இந்த துன்பகரமான வாழ்க்கையின்போது நாம் இறைவனின் துணையை தேட வேண்டும்.

துன்பத்தின் மூலம் இறைவன் எம்மை தண்டிக்கின்றார் என நாம் எண்ணக் கூடாது. நாம் ஒருங்கிணைந்த மக்களாக வாழ வேண்டும். இன்று போதைப் பொருள் குடிவெறி எமது சமூதாயத்தை சீரழிக்கின்றன. இதனால் நாம் ஒருங்கிணைந்த மக்களாக செல்ல முடியாத நிலையாக தோன்றி வருகின்றது. ஆகவே யாவரும் நற்செயல் புரிபவராகவும் உதவி செய்யும் மனப்பாங்குடனும் வாழ நாம் எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.

# மூத்த ஓய்வு நிலை அதிபர் தங்கராஜா காலமானார்



(காரைதீவு நிருபர் சகா)

காரைதீவின் மூத்த ஓய்வு நிலை அதிபரும், பாலையடி வாலவிக்னேஸ்வரர் ஆலய தர்மகத்தாவுமான இளையதம்பி தங்கராசா நேற்று முன்தினம்(11) பௌர்ணமி அன்று காலமானார். அவருக்கு வயது 92 ஆகும். 3 பிள்ளைகளின் தந்தையான இ. தங்கராசா சமூக வாழ்வில் தன்னை பூரணமாக ஈடுபடுத்திக் கொண்ட ஒரு சமாதான நீதிவான் .

காரைதீவிலுள்ள பல பொது அமைப்புகளிலும் தலைமை தாங்கி வழிகாட்டல்களை செய்து வந்த ஒரு தலைவராவார். அவர் முன்னாள் காரைதீவு கிராம சபை அக்கிராசனரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினராகவும், வளர்ந்தோர் கல்வி அதிகாரியாகவும் இருந்து காரைதீவுக்கு பல சேவைகளை ஆற்றிய மறைந்த இ.வினாயகமூர்த்தி அவர்களின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரின் தகனக்கிரியை, நாளை(14) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு முப்பது மணி அளவில் காரைதீவு இந்து மயானத்தில் நடைபெறும் என்று குடும்பத்தினர் தெரிவித்துள்ளார்கள்.